**தலைப்பு 300 – உணவு ஆணையாளர் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 300 – உணவு ஆணையாளர் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு, கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து மூடிவிடும் நடவடிக்கைகளைச் செய்வதற்கான முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 செப்தெம்பர் 26 ஆம் திகதி திணைக்களத்தின் ஆணையாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து மூடிவிடும் நடவடிக்கைகளைச் செய்வதற்கான முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 228.37 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 194.65 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 33.72 மில்லியன் அதாவது 14.77 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 206.69 | 192.64 | 14.05 | 6.80 |
| மூலதன | 21.68 | 2.01 | 19.67 | 90.73 |
| மொத்தம் | 228.37 | 194.65 | 33.72 | 14.77 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 30001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 7.64 | 4.10 | 3.64 | 4.63 | 40.00 | 16.59 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0107/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 36.23 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 04 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 150.4 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
| --- | --- |
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0008/0013/000 | 76.67 |
| 6000/0000/00/0016/0120/000 | 5.57 |
| 6000/0000/00/0013/0131/000 | 66.35 |
| 6000/0000/00/0001/0125/000 | 1.81 |
| மொத்தம் | 150.4 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

உணவு ஆணையாளர் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து மூடிவிடும் நடவடிக்கைகளைச் செய்வதற்கான முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.1.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 10,200,000 தொகையான மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 10 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 25 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.2 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

**3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

விரிவான பட்டோலை, மீதிகளின் உறுதிப்படுத்தல்கள், காலப்பகுப்பாய்வு மற்றும் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் போன்ற தேவையான சான்றுகள் இன்மையினால் ரூபா 1,099,644,390 தொகையான 11 கணக்கு விடயங்களை திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**3.4 பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப் பிரமாணம் 565(5) இன் பிரகாரம் பொது 71 மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்பட்ட வைப்புப் பொழிப்புக் கூற்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 6000/0000/00/0013/0131/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 66,346,411 தொகையான மீதியில் 1989 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

30001 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,217,808 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 10 வருடங்கள் வரையிலான காலவீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்தது. அந்த கடன் மீதிகளில் 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவில் ரூபா 94,810 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் மேலும் ரூபா 3,122,998 தொகையான கடன் மீதி நிலுவையாகக் காணப்பட்டது. அந்த நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**3.6 கொடுக்கல் வாங்கல்களை தீர்த்துவைக்கும் நடவடிக்கைகளைச் செய்வதற்கான முற்பணக் கணக்கு**

2003 திசெம்பர் 10 ஆந் திகதிய அமப/03/1176/126/017/ஈபீசீ/445 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மேலதிக பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் 2004 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய பீடீ/ஏடீஏசீ/சீஓஎம்/எப்சீ/எப்டீ ஆம் இலக்க கடிதத்தின் மூலம் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட உணவு கொள்வனவு செய்தல் மற்றும் பகிர்ந்தளிக்கும் முற்பணக் கணக்கு 2004 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூடிவிடுவதற்கும் கலைப்பதற்குமான நடவடிக்கைகளுக்காக திணைக்களம் அல்லது அமைச்சின் கீழ் கலைத்தல் பிரிவொன்றை நடாத்திச் செல்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறான பிரிவொன்று நியமிக்கப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படாதிருந்ததுடன் அந்தக் கலைத்தல் நடவடிக்கைகள் உணவு ஆணையாளரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 11 வருடங்கள் கடந்திருந்தும் கலைத்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கலைக்கும் பிரிவொன்று நியமிக்கப்பட்டமைக்கு சான்றுகள் காணப்படாத போதிலும் 2005 சனவரி 01 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 45,351,746 தொகையான சொத்துக்கள், சீராக்கங்கள் மற்றும் தேறியவைகள், ரூபா 75,902 தெைாகயான பொறுப்புக்கள், சீராக்கங்கள் மற்றும் தீர்த்தல்கள் யாவும் உணவு ஆணையாளரினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டமைக்கான எவ்வித சான்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இந்த முற்பணக் கணக்கு 2005 சனவரி 01 ஆந் திகதி முதல் கலைக்கப்பட்டுக் கொண்டிருந்ததுடன், இதன் ஒட்டுமொத்த நட்டம் ரூபா 981,398,869 ஆக இருந்தது. அந்நட்டத்தைப் பதிவழித்தல், கணக்கீடு செய்தல் உரிய செயற்பாடுகளுக்குத் தேவையான நிதி ஏற்பாட்டை வழங்குவதற்கு 2010 நவம்பர் 04 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டுவரை ரூபா 342,396,972 தொகை பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் பதிவழிப்பதற்குள்ள மீதி ரூபா 639,001,897 ஆக இருந்த போதிலும், அது நிதிக் கூற்றுக்களில் ரூபா 598,640,879 ஆக ரூபா 40,361,018 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) உணவுத் திணைக்களத்தினால் வெளிநிறுவனத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்ட 61 களஞ்சியங்களில் இருந்து 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய நிலுவை களஞ்சிய வாடகை ரூபா 77,029,282 கூட்டுமொத்தமாக இருந்தது. இதில் 21 களஞ்சியங்கள் இது வரையில் மீளக் கையேற்கப்பட்டிருந்த போதிலும், வாடகை உரிமையாளர்களிடமிருந்து அறவிடவேண்டியுள்ள ரூபா 34,003,346 கூட்டுத்தொகையான நிலுவை வாடகை 2016 யூலை 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிறுவனங்கள் மற்றும் 13 நபர்களுக்காக குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த கட்டிடத்திற்காக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 2,860,238 கூட்டுத்தொகையான நிலுவை மின்சார மற்றும் நீர்க்கட்டணங்களில் 2016 ஆகஸ்ட் 31 வரையிலும் மேலும் ரூபா 1,445,725 தொகை அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது.

(உ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 337,331,750 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்யும் செயல்முன்னேற்றம் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது.

### 3.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

ஒறுகொடவத்தை களஞ்சியத் தொகுதியில் 4.05 ஹெக்டேயர் அளவான காணிப்பகுதி மற்றும் அதில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 84,840 சதுர அடியான களஞ்சியத்திற்கான பிரதான விலை மதிப்பீட்டாளரின் மாதாந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 4,500,000 ஆக இருந்த போதிலும், அத்தொகை மிகவும் அதிகமாக இருந்தமையால், நியாயமான மதிப்பீட்டின் அடிப்படையில் இந்த களஞ்சியத்தை வழங்குமாறு குத்தகையாளர் கோரியிருந்தார். 2009 திசெம்பர் 17 ஆந் திகதி கட்டிடத்திற்காக மாத்திரம் எனக் குறிப்பிட்டு மீண்டும் மாதாந்தம் ரூபா 2,465,000 ஆக மதிப்பிடப்பட்டு 30 வருடங்களுக்காக அந்த குத்தகையாளருக்கு குத்தகைக்கு வழங்கி மாதத்திற்கு ரூபா 2,465,000 வீதம் வாடகை அறவிட்டதன் காரணமாக காணிக்காக அரசாங்கத்திற்குக் கிடைக்கவேண்டியிருந்த பாரியளவான வாடகை வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 4.05 ஹெக்டேயர் அளவான பாரியளவான காணி 30 வருடகாலம் முடியும் வரை திணைக்களத்திற்கு எந்தப் பயன்பாட்டிற்கும் எடுப்பதற்கு முடியாதிருந்தது. இறுதி மதிப்பீட்டின் போது மேற்கூறப்பட்ட வாடகை 03 வருடங்களுக்கு ஒரு தடவை மீள் திருத்தம் செய்யப்பட வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் வாடகை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.8 செயலாற்றல்

2015 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரமான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### திட்டமிடல்

2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான கால எல்லைக்காக திணைக்களம் தயாரித்த கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்திற்குச் சொந்தமான மொ.தொ. 50,000 பாதுகாப்பு அரிசி இருப்பொன்றைப் பேணிச் செல்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கு இணங்க மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 2015 ஆம் ஆண்டின் போது மொ.தொ. 28,000 அரிசி பாதுகாப்பு இருப்பொன்று மாத்திரம் பேணிச் செல்வதே திணைக்களத்தின் பிரதான பணியாக இருந்தது. எவ்வாறாயினும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்திற்குச் சொந்தமாக பாதுகாப்பு அரிசி இருப்பொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 3.9 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அவசர இடர் நிலையின் போது பயன்படுத்துவதற்காகவும் சந்தை விலை தளம்பலடையும் சந்தர்ப்பத்தின் போதும் சந்தைக்கு அரிசியை வழங்கும் எதிர்பார்ப்பிலும் உள்நாட்டு அரிசி நுகர்வில் இனங்காணக்கூடிய மிகையை ஏற்றுமதிக்கு தொடர்புபடுத்தும் எதிர்பாாப்புடனும் தரமான நிலையில் அரிசி இருப்பை பேணிச் செல்லல் திணைக்களத்தின் நோக்கமாக இருந்தது. அதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 22,897,575 செலவில் வெயாங்கொடை 10 ஆம் இலக்க களஞ்சியம் விஞ்ஞான ரீதியான களஞ்சியமாக நியமிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) களஞ்சியத்தின் மொத்த இயலளவான மொ.தொ. 5,400 இல் முதலாம் வருடத்தின் போது 12 சதவீதமான மொ.தொ. 668 அரிசி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. இந்த இருப்பு 2014 ஏப்ரல் மாதம் வரையில் விற்றுத் தீர்க்கப்பட்டதன் பின்னர் 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரை களஞ்சியம் விளைவற்றுக் காணப்பட்டது. அதன் பின்னர் 2014 ஒக்தோபர் 16 ஆந் திகதி முதல் 2015 ஒக்தோபர் 21 ஆந் திகதி வரை ரூபா 200,000 மாதாந்த வாடகையின் அடிப்படையில் கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அத்தாபனத்திலிருந்து நிலுவை வாடகை மற்றும் நில இராக்கைகளுக்காக அறவிடவேண்டிய ரூபா 1,159,401 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 ஒக்தோபர் 22 ஆந் திகதி முதல் இந்த அறிக்கைத் திகதி வரையும் களஞ்சியம் விளைவற்றுக் காணப்பட்டது. அதன் பிரகாரம் விஞ்ஞான ரீதியான களஞ்சியமொன்றாக நியமிக்கப்பட்டு 04 வருடங்களுக்கு அண்மித்த காலமாக இருந்த போதிலும், இந்தக் களஞ்சியம் தாபிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்கோ அல்லது செலவிடப்பட்ட தொகையிலிருந்து வினைத்திறனான விளைவைப் பெற்றுக்கொள்தற்கோ 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

(ஆ) ஹெயாங்கொடை களஞ்சியத் தொகுதியில் காணப்பட்ட 11 ஆம் இலக்க களஞ்சியம் 2005 ஆம் ஆண்டு முதல் அரசாங்கத்தின் மதிப்பீட்டு அறிக்கையொன்று இன்றி மாதாந்தம் ரூபா 50,000 இற்கு தனியார் கம்பனியொன்றிற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கம்பனி தொடர்ச்சியாக வாடகை செலுத்தாமையினால் நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்காகவும் களஞ்சியத்தின் உரித்தைப் பெற்றுக்கொள்வதற்காகவும் வழக்கு தொடரப்பட்டிருந்தது. வழக்கு தொடரப்பட்டதன் பின்னர் ரூபா 25 இலட்சம் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,861,493 தொகையொன்று அறவிடவேண்டியிருந்தது.

(இ) கெட்டுவான 02 ஆம் இலக்க களஞ்சியத்தில் 2003 ஆம் ஆண்டு முதல் 2018 ஏப்ரல் 09 ஆந் திகதி வைர தனியார் கம்பனி ஒன்றிற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மும்மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகளின் அடிப்படையில் வாடகைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்தக் கம்பனியிலிருந்து ரூபா 1,178,304 தொகை அறவிடுவதற்கு இருந்ததுடன் அதில் 2016 யூலை 31 ஆந் திகதியளவில் ரூபா 954,216 அறவிடவேண்டியிருந்தது.

(ஈ) கட்டுகஸ்தொட்ட களஞ்சியம் 2010 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 2018 யூலை 31 ஆந் திகதி வரை தனியார் நிறுவனமொன்றிற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மாதாந்த வாடகைப் பணம் குறித்த பிரகாரம் செலுத்தாமையின் காரணமாக 2015 திசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்த நிறுவனத்திலிருந்து ரூபா 3,633,680 தொகையொன்றை திணைக்களத்திற்கு அறவிடவேண்டியிருந்தது. அது 2016 யூலை 31 ஆந் திகதியளவில் ரூபா 4,320,720 ஆக இருந்தது. இந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கோ அல்லது இது தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ஒறுகொடவத்த 03 ஆம் இலக்க களஞ்சியம் 2003 திசெம்பர் 03 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2005 ஆம் ஆண்டின் பின்னர் வாடகைக் காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திலிருந்து ரூபா 4,464,426 தொகை அறவிடவேண்டியிருந்ததுடன் அது 2016 யூலை 31 ஆந் திகதியளவில் ரூபா 7,551,922 ஆக இருந்தது.

(ஊ) பள்ளேகல உணவுக் களஞ்சியம் 2013 ஆகஸ்ட் 02 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தனியார் கம்பனியொன்றிற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், களஞ்சியத்தை கையளித்த திகதி முதல் இது வரை எந்தவொரு வாடகையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 4,858,832 தொகை திணைக்களத்திற்கு அறவிட வேண்டியிருந்ததுடன் அது 2016 யூலை 31 ஆந் திகதியளவில் ரூபா 6,139,953 ஆக இருந்தது. எவ்வாறாயினும் நிலுவை வாடகையை அறவிடுவதற்காக எந்தவொரு சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ அல்லது களஞ்சியத்தை மீளக் கையேற்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) வெயாங்கொடை 04 ஆம் இலக்க களஞ்சியம் 2010 மே 12 ஆந் திகதி முதல் வருடத்திற்கு வருடம் நீடிக்கும் அடிப்படையில் தனியார் கம்பனியொன்றிற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2012 மே 11 ஆந் திகதியின் பின்னர் 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் வாடகை உடன்படிக்கை நீடிக்கப்பட்டிருக்கவில்லை. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியிலிருந்து அறவிடவேண்டியிருந்த வாடகை ரூபா 878,832 ஆக இருந்ததுடன் அது 2016 யூலை 31

ஆந் திகதியளவில் ரூபா 1,119,042 ஆக இருந்த போதிலும், வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) திணைக்களத்தின் 08 களஞ்சியங்களில் வாடகை அறவிடப்படாமல் லங்கா சதொசவிற்கு வாடகைக்கு வழங்கியமையின் காரணமாக 2015 ஆம் ஆண்டிற்காக திணைக்களத்திற்கு ரூபா 7,326,000 தொகையான வாடகை வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

(ஐ) திணைக்களத்திற்குச் சொந்தமான 12 களஞ்சியங்கள் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக அறவிடவேண்டிய களஞ்சிய வாடகை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 23,937,273 ஆக இருந்ததுடன் அது 2016 யூலை 31 ஆந் திகதியளவில் ரூபா 21,998,629 ஆக இருந்தது.

(ஒ) அரச நிறுவனத்திற்கு வாடகையின்றி 39 களஞ்சியங்களும் 04 அலுவலக வளாகங்களும் வழங்கப்பட்டமையின் காரணமாக திணைக்களத்திற்கு எந்தவொரு வாடகை வருமானமும் கிடைத்திருக்கவில்லை.

(ஓ) வெயாங்கொட விஞ்ஞான ரீதியான களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்துவதற்காக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது இரண்டு தனியார் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு அரிசி வழங்கும் அடிப்படையில் விநியோகிக்கப்பட்டமைக்காக ரூபா 6,724,121 தொகையும், மீள வழங்கப்படாத பொலிசெக் பைகளுக்காக ரூபா 79,567 தொகையும் 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஔ) ஒறுகொடவத்த 15 ஆம் மற்றும் 16 ஆம் இலக்க களஞ்சியங்களை 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் வாடகைக்குப் பெற்ற கம்பனியிலிருந்து அறவிடவேண்டியிருந்த ரூபா 21,959,744 தொகை மற்றும் அந்த நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 20,255,600 தொகைகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.10 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | பதவியணியின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 05 | 03 | 02 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 115 | 46 | 69 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 03 | 01 | 02 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 107 | 62 | 45 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 02 | - | 02 |
| | **மொத்தம்** | **230** | **114** | **118** | **02** |